### மாற்றுத் திறனாளிகளை

# ‘ஊனமுற்றோர்’ எனக் கூறிய அமைச்சர் அருண்ராஜ்!

## மாற்றுத் திறனாளிகள் அணி மாநிலச் செயலாளர் தீபக்நாதன் கண்டனம்!



சென்னை, ஆக. 15-

மாற்றுத்திறனாளிகளை உடல் ஊனமுற்றோர் எனக் கூறிய அமைச்சர் அருண் ராஜுக்கு,தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணி மாநிலச் செயலாளர் தீபக் நாதன் கண்டனம் தெரிவித் துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

தந்தை பெரியாரைக் கொள்கை தலைவராக வைத்திருக்கிறோம் என்று பெருமை பீற்றிக் கொள்ளும் த வெ.க அரசின் அமைச்சர் அருண்ராஜ் பகுத்தறிவுக்கு சற்றும் ஏற்பில்லாத வார்த்தையான உடல் ஊனமுற்றோர் என்ற வார்த்தையை மாற்றுத் திறனாளிகளை குறிப்ப தற்காக பயன்படுத்தி உள்ளதற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

வார்த்தைகளால் கூட காயப்படுத்தி விடக் கூடாது என்று ஊனம் உற்றவர்கள் என்ற வார்த்தையை மாற்றி மாற்றுத்திறனாளிகள் என்கின்ற வார்த்தையை அழகு தமிழில் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் என அவர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.திமுகவின் மீது கடும் ஒவ்வாமையில் உள்ள த.வெ.க. அரசு, எல்லா திட்டங்களுக்கும் பெயர் மாற்றுவதைப் போல், பொது புத்தியில்" அழுக் கேறிய சிந்தனையில் கூறப் படுகின்ற வார்த்தை யான ஊனமுற்றோர் என்ற வார்த்தையை அமைச்சர் பயன்படுத்தியிருப்பது ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது என கண்டனம் தெரி வித்துள்ளார்.

மாற்றுத்திறனாளிகளை உடல் ஊனமுற்றோர் என குறிப்பிட்ட அமைச்சர் அருண் ராஜ் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என தி.மு.க. மாற்றுத்திற னாளிகள் அணி மாநிலச் செயலாளர் தீபக் நாதன் வலியுறுத்தி உள்ளார்.

### நாகர்கோவில் மாநகர தெற்குப் பகுதி

# 35 வது வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!



கன்னியாகுமரி, ஆக.15-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி, 35 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்ட மானது 35 வது வட்ட கழக செயலாளர் சி.ராம கிருஷ்ணன் தலைமையில், நாகர் கோவில் மாநகர தெற்கு பகுதி செயலாளர் த.ஜீவா முன்னிலையில் 13.08.2026, வியாழக்கிழமை அன்று மாலை 6.30 மணியளவில் நாகர்கோவில், கணபதி நகர் பகுதியில் வைத்து நடை பெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியா குமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர் வாகி களுக்கு ஆலோசனை கள் வழங்கினார்.

ஆலோசனைக் கூட்டத் தில் நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி அவைத் தலை வர் எஸ்.லெட்சுமணன், கழக நிர்வாகிகள் V.ரதீஷ், வர்க்கீஸ், சுபாஷ், S.கோலப் பன், சேவியர், J.அபிசேக் உட்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர் வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நாகர்கோவில், கணபதி நகர், புதுத்தெரு பகுதியில் இடித்து அகற்றப்பட்ட சேதமடைந்த அங்கன்வாடி மையம் இருந்த பகுதியில் புதிய அங்கன்வாடி கட்டி டம் அமைத்து தர மாவட்ட நிர்வாகத்தை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்து வது என தீர்மானிக்கப் பட்டது.

கழக பணியினை தொய் வின்றி நடத்த கழக தலை வர் தளபதியாரின் அன்பு கட்டளையை ஏற்று நடக்க வும், மாவட்ட கழகம் அறி விக்கும் பணிகளை செவ் வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண் டும் என தீர்மானிக்கப் பட்டது.

கடந்த தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகி களுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட் சியினருக்கும் மற்றும் வாக் களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற் றும் நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி கழகம் சார் பாக நன்றி தெரிவிக்கப்பட் டது.

### வில்லியனூர் அரிசிக் கடையில் பெட்ரோல் குண்டு வீசிய சம்பவம்

# சட்டம் - ஒழுங்கை: கேலிக்கூத்தாகி உள்ளது!

## புதுவை தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா கடும் கண்டனம்!



புதுவை, ஆக.15-

வில்லியனூர் மார்க்கெட் டில் உள்ள அரிசி கடையில் ரவுடி மாமூல் கேட்டு தரா ததால் பெட்ரோல் குண்டு வீசிய சம்பவம் சட்டம்-ஒழுங்கை கேலிக்கூத்தாக்கி உள்ளதாக புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா கடும் கண்ட னம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்ப தாவது: -

புதுச்சேரி மாநிலத்தில் ஆன்மீக ஸ்தலத்திற்கு புகழ் பெற்ற வில்லியனூர் தொகு தியில் கடந்த ஐந்தாண்டு காலத்தில் மக்கள் அச்ச மின்றி வாழும் சூழல் இருந் தது. காரணம் காவல் துறை சுதந்திரமாக செயல்பட் டது. ரவுடிகள் இரும்புக்க ரம் கொண்டு அடக்கப்பட் டனர். இந்நிலையில் வில்லியனூர் மார்க்கெட் பகுதியில் அமைந்துள்ள அரி சிக் கடை ஒன்றில், நேற்று ரவுடிகள் மாமூல் கேட்டு மிரட்டி உள்ளனர். கடை உரிமையாளர் மாமூல் தர மறுத்ததால் பொதுமக்கள் அதிகம் புழங்கும் மார்கெட் பகுதியில் உள்ள அரிசிக் கடையில் பெட்ரோல் குண் டுகள் வீசி தாக்குதல் நடத்தி உள்ளனர்.

இச்சம்பவத்தால் வியா பாரிகளும், பொதுமக்களும் எவ்வளவு துயரம் அடைந் துள்ளார்கள் என்பதை பார்க்க முடிந்தது. புதுச்சேரி மாநிலத்தில் என்.ஆர்.காங்கி ரஸ் - பாஜக கூட்டணி ஆட் சியில் சட்டம்-ஒழுங்கு சீர் குலைந்து, ரவுடிகளின் கை ஓங்கியுள்ளதையே இச்சம்ப வம் காட்டுகிறது.

மக்கள் நடமாட்டம் மிகுந்த வில்லியனூர் நகரப் பகுதியில் இத்தகைய துணி கரமான தாக்குதல் நடத்தப் பட்டிருப்பது, உளவுத்துறை யின் தோல்வியையும், காவல் துறையின் செயலற்ற தன்மையையும் காட்டுகி றது. சுதந்திரமாக செயல் பட்ட வில்லியனூர் காவல் துறை இன்று ஏவல் துறை யாக மாறிவுள்ளதோ என்ற சந்தேகத்தை இச்சம்பவம் ஏற்படுத்துகிறது. காவல் துறை சுதந்திரமாக செயல் பட அனுமதிக்க வேண்டும். அப்போது தான் ரவுடிகள் தலைதூக்க மாட்டார்கள்.

வியாபாரிகளை அச்சு றுத்தும் வகையில் பெட் ரோல் குண்டு வீச்சு சம்பவத் தில் ஈடுபட்ட ரவுடிகளை எவ்வித அரசியல் தலையீ டும் இன்றி காவல்துறை உடனடியாக இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண் டும். புதுச்சேரி மாநிலம் முழுவதும் உள்ள வணிகர் கள் அச்சமின்றி தொழில் செய்ய ஏதுவாக சந்தைப் பகுதிகளிலும், வணிக வளா கங்களிலும் போலீஸ் பாது காப்பை பலப்படுத்த வேண் டும். புதுச்சேரியை மீண்டும் ரவுடிகள் கூடாரமாக மாறு வதற்கு அரசு அனுமதிக்கக் கூடாது. மாமூல் கேட்கும் சமூக விரோதிகள் மீது குண் டர் சட்டத்தின் கீழ் கடுமை யான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வணிகர் கள் மற்றும் பொதுமக்கள் சார்பாக கேட்டுக்கொள்கி றேன்.

### தொ.மு.ச. பேரவை செயற்குழுக் கூட்டம்

#### பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் **செயற்குழுக் கூட்டம்** வரும் 26.08.2026 (புதன்) அன்று காலை 9.00 மணி அளவில் **திருச்சி மாவட்டக் கழக அலுவலகமான “கலைஞர் அறி வாலயத்தில்”** பேரவைத் தலைவர் **கி.நடராசன்** அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் பேரவை நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட கவுன்சில் செயலாளர்கள் உள்ளிட்ட செயற்குழு உறுப்பினர்களும், சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட கவுன்சில் தலைவர் கள், பொருளாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள் கிறோம்.

**பொருள்:**

1.மாவட்ட கவுன்சில்களின் செயல்பாடுகள் குறித்து

2.மத்திய – மாநில அரசுகளின் தொழிலாளர் விரோத நடவடிக்கைகள் குறித்து

3.தணிக்கை செய்யப்பட்ட 2025–ஆம் ஆண் டிற்கான வரவு – செலவு கணக்குகளை அங் கீகரித்தல்.

4.தலைவர் அனுமதியுடன் கொணரப்படும் இதர பிரச்னைகள் குறித்து.

இடம்:கலைஞரகம்

**மு.சண்முகம்**, Ex.MP
பொதுச்செயலாளர்
தொ.மு.ச. பேரவை

# கோமாளிக் கூட்டத்தின் கேலிக் கூத்துகளால் - தடுமாறி நிற்கும் தமிழ்நாடு!

மன்னன் கோமாளியானால் நாடு சர்க்கஸ் கூடாரமாய் ஆகிவிடும் என்பது வெளிநாட்டு மொழி. சர்க்கஸில் ஒரு கோமாளி இருக்கலாம் இரண்டு மூன்று கோமாளிகள் கூட இருக்கலாம். அமைச்சரவையே கோமாளிகூட்டம் என்றால் நாடு தாங்கிடுமா? தாம்பூலத்தில் வெற்றிலைபாக்குடன் சுண்ணாம்பு இருக்கலாம், ஆனால் தாம்பூலம் முழுவதும் சுண்ணாம்பு என்றால் வாய் என்னாகும்?

நிதி அமைச்சர் தாமிரபரணி என்பதற்குப் பதில் தாம்பரம் பரணி என்கிறார். ஐந்தாயிரத்து மூவாயிரத்து முப்பத்தி ஒன்று என்கிறார். அடுத்து நாற்பதாயிரத்து நாற்பத்தி பனிரெண்டு என்கிறார். என் மதம் கற்றுத்தந்த அன்புமொழியைத் தமிழ் மொழியும் கற்றுத் தராது என்கிறார். உறவினர்களையே கம்பெடுத்து அடிப்பதுதான் இவர் கற்ற மொழியா?

சி.எஸ், டாக்டர் நாவலர், நாஞ்சிலார், பேராசிரியர், பி.டி.ஆர், தங்கம் தென்னரசு என உயர்ந்தவர்கள் அமர்ந்த இருக்கை இன்று கேவலப்படுகிறது.

மற்றொரு அமைச்சர் புஸ்ஸி ஆனந்த் “நான் அவன் இல்லை” படத்தில் கதாநாயகனின் தாய்மொழி எந்த மொழி என்பதற்குப் பெரிய ஆராய்ச்சி நடப்பதுபோல், புஸ்ஸி ஆனந்த் பேசும் மொழி எந்த மொழி என பெரிய ஆராய்ச்சியே நடத்தலாம்.

ஒருவர் திருட்டு லாட்டரி, ஒருவர் கள்ள டிக்கெட் விற்றவர், ஒரு சட்டமன்ற மகளிர் உறுப்பினர், எனது மன்மத நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என பலமுறை கூறுகிறார். இவர் சட்டமன்றத்தை இந்திரலோகம் என நினைத்துக்கொண்டு பேசுகிறாரா தெரியவில்லை.

ஒரு பெண் அமைச்சர் “என்னைக் கேட்காமல் என் தொகுதிக்குள் வந்தால் காலைவெட்டி விடுவேன், ஆளைத் தொலைச்சிடுவேன்” என்கிறார்.

ஒரு அமைச்சர் “பிளம்பருக்கு படியுங்கள்” என குலக்கல்வி திட்டத்தை அளிக்கிறார்.

ஒரு அமைச்சரிடம் “தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கம் உண்டா?” என நிருபர்கள் கேட்டால், “நான் திருச்செந்தூரில் அல்லவா நிற்கிறேன்” என அல்வா கொடுக்கிறார்.

ஒரு அமைச்சர் பெண் குழந்தையின் கால்களைத் தடவி அசிங்கப்பட்டு நிற்கிறார்.

ஒரு அமைச்சர் கோவில் வளாகத்திற்குள் மாத்திரையை இடித்து பவுடர் ஆக்கிச் சாப்பிடுகிறார்.

ஒரு அமைச்சர் கோவிலின் உட்பகுதியில் செருப்புப் போட்டு நடக்கிறார்.

ஒருவர் 26.05.20.26 என்கிறார்.

ஒருவர் ரீல்ஸ் போட கேமராவுடன் பள்ளிக்குச் சென்று மாணவிகளைத் தாறுமாறான கேள்விகள் கேட்டு அவமானப்படுத்துகிறார்.

வேளாண்மை பட்ஜெட்டுடன் ஒரு அமைச்சர் திருப்பதி சென்று வழிபட்டு வருகிறார்.

ஒரு அமைச்சர் பட்ஜெட்டுடன் ஜெபமாலையைக் கொண்டுவந்து உருட்டி வணங்கிவிட்டு பட்ஜெட்டை படிக்கிறார்.

நாளை ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், பட்ஜெட்டை அயோத்தி ராமர் கோவிலில் வைத்து வணங்கிவிட்டுத்தான் வெளிவரும் என்றால் மார்க்சிஸ்ட், வி.சி.க., முஸ்லிம் லீக் கட்சிகள் ஒப்புக்கொள்ளுமா?

அமெரிக்க அதிபர் ரீகன், ஆந்திராவில் என். டி.ஆர், தமிழகத்தில் எம்.ஜி.ஆர். என பல முதலமைச்சர்கள் திரையுலகத்திலிருந்து விலகி, அதிகார மையத்திற்கு செல்லும்போது யாரும் தியேட்டர்களில் அழும் கோமாளித்தனத்தைத் செய்ததில்லை. இங்கே அமைச்சர்கள் கத்துகிறார்கள், கதறுகிறார்கள்.

ஏறத்தாழ அனைத்து அமைச்சர்களுமே இப்படிக் கோமாளிகளாக இருந்தால், தமிழ்நாடு சர்க்கஸ் கூடாரமாக கூட இருக்கத் தகுதியற்ற ஒன்றாக மாறிவிடும்.

ஒன்றிய அரசு பல துறைகளில் முதன்மை பெற்ற மாநிலமாக தமிழகத்தை தேர்வு செய்து விருது தரும்போது, அதைப் பெறுகிற நீங்கள், அந்தக் கேடயத்தை பெறுவதற்குக் காரணமான முன்னாள் முதல்வர் தளபதி ஸ்டாலினுக்கு நன்றி சொல்லியிருக்க வேண்டும்.

கோட்டையில் ஆகஸ்ட் 15ல் தேசிய கொடியினை ஏற்றும்போது, இந்தக் கொடியினை ஏற்றும் உரிமையை முதல்வர்களுக்கு பெற்றுத் தந்த என் நாற்பதாண்டு கால நண்பர் டாக்டர் மு. கலைஞர் கருணாநிதிக்கு என் நன்றியினை இந்த ராமச்சந்திரன் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார் எம்.ஜி.ஆர். அவர்கள். அந்த நன்றி த.வெ.க.வினருக்கு இல்லையே! இருந்தால் கலைஞருக்கு, தளபதிக்கு நன்றி சொல்லியிருப்பார்கள்.

இந்த ஆட்சியினரிடம் நல்ல பெயரை எடு, நல்ல பெயரை எடு என்றால் அதைத் தவறாக புரிந்துகொண்டு நல்ல பெயரான முத்தமிழறிஞர் கலைஞரின் பெயரை பல திட்டங்களிலிருந்து எடுத்து வருகின்றனர்.

நலிந்த பிரிவினருக்கு வீடு வேண்டும் என முதன் முதலாக குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம் கண்டவர் கலைஞர். அனைத்து சாதியினரும் ஒற்றுமையாக வாழலாம் என உலகிற்குக் காட்டிட சமத்துபுரம் கண்டவர் தலைவர் கலைஞர்.

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன் முதலில் கலைஞர் முயற்சியால் ஏழைகளுக்கு வீடு கட்டும் திட்டம் உருவானது.

அந்தக் கலைஞர் பெயரால் “கலைஞர் கனவு வீடு திட்டம்” தளபதி ஸ்டாலினால் கொண்டுவரப்பட்டது. அந்தத் திட்டத்திலும் கலைஞர் பெயரை எடுத்துவிட்டனர்.

எம்.ஜி.ஆர். ஆட்சியில் நந்தனம் வீட்டு வசதி வாரியக் கட்டிடத்திற்கு “கலைஞர் கருணாநிதி வீட்டு வசதி வாரியம் மாளிகை” என்று இருந்த பெயரை “பெரியார் வீட்டு வசதி வாரிய மாளிகை” என மாற்றிவிட்டனர். காரணம் கேட்டபோது உயிருடன் இருப்பவர் பெயரை வைக்கக்கூடாது என்பதால் மாற்றி உள்ளோம் என்றனர்.

ஆனால் இப்போது பல திட்டங்களில் இருந்த கலைஞரின் பெயரை மாற்றியதற்கு விஜய் ஒரு காரணமும் கூறவில்லை.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

அடுத்த ஜென்மத்தில் விவசாயியாக பிறக்க வேண்டும் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தவர், வேளாண் துறைக்கு நிதியைக் குறைத்து விவசாயிகளை வஞ்சிப்பதா?

அதற்கு அடுத்த ஜென்மம் எதற்கு? இந்த ஜென்மத்திலேயே நிலம் சாகுபடி செய்து விவசாயியாக ஆகலாமே!

ராஜீவைக் கொன்ற வீண்பழி தி.மு.க.வின்மீது விழ 1991 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.விற்கு 2 இடம் தான் கிடைத்தது. அடுத்து வந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. மாபெரும் வெற்றி கண்டு ஆட்சியைப் பிடித்தது.

பாராளுமன்ற தேர்தலில் 39 க்கு 39 தோற்ற வரலாறும் உண்டு. அடுத்த தேர்தலிலேயே மீண்டும் 39க்கு 39 பெற்ற வரலாறும் தி.மு.க.விற்கு உண்டு. இடிவிழும்போதே எழுந்த இயக்கம் தி.மு.க. இப்போது இருமலுக்கா வீழ்ந்துவிடும்?

எங்கள் எதிரியானாலும் எங்களின் கொள்கையை நிறைவேற்றும் போது ஆதரிப்போம் என்பதை தமிழ்நாடு சட்டமன்றத்தில் த.வெ.க. கொண்டு வந்த தீர்மானத்தை தி.மு.க. ஆதரித்ததிலேயே மக்களுக்கு புரிந்திருக்கும்.

காலுக்கு ஏற்பத்தான் செருப்பு. செருப்புக்கு ஏற்ற கால் அல்ல. தீர்மானம்தான் முக்கியம். அதை தரும் கட்சி அல்ல.

த.வெ.க. ஆனாலும் “நீட் எதிர்ப்பு, தமிழ்த்தாய் வாழ்த்து, தொகுதி சீரமைப்பில், அதே 7.5 சதவீதம்” இவைகளை கொண்டு வந்தால் தி.மு.க.வினர் ஆதரிப்போம்.

எங்களின் அன்றைய கூட்டணி கட்சிகளான காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள் ஆதரிப்பதனாலேயே எங்களுக்கு உடன்படாத கொள்கையை தீர்மானமாக பா.ஜ.க. கொண்டுவந்தால் நாங்கள் ஆதரிக்கவில்லை, எதிர்ப்போம்.

ஆம் பொருளாதார அடிப்படையில் பா.ஜ.க. பிராமணர் உள்ளிட்ட உயர் ஜாதியினருக்கு பத்து சதவீதம் இடஒதுக்கீடு கொண்டுவந்தபோது, பா.ஜ.க. கொண்டு வந்ததை காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள் ஆதரித்தன. தி.மு.க.வினர் பா.ஜ.க. தீர்மானத்தை எதிர்த்து போராடினார்கள்.

நீங்கள் பா.ஜ.க.வை எதிர்க்கும்போதெல்லாம் நாங்கள் எதிர்ப்பது என்பதும், நீங்கள் பா.ஜ.க.வை ஆதரிக்கும்போது தி.மு.க.வும் ஆதரிக்கவேண்டும் என்பதெல்லாம் இயல்பை கடந்தது. கொள்கையில் சமாதானம் தி.மு.க.வில் எப்போதும் கிடையாது. காங்கிரஸ் கருத்துக்கு தி.மு.க. ஒத்துவராவிட்டால் எட்டப்பர்களா? எட்டப்பர் கூட்டமே எட்ட நில்.

ஒதியமரம் உக்கரத்துக்கு உதவாது. அதுபோல் இந்தியர்களுக்கு உதவாத காங்கிரஸ் கூட்டத்தின் எட்டப்ப குரல் தமிழ்நாட்டில் எடுபடாது.

எட்டப்ப கூட்டமே எட்டநில். எட்டப்ப கூட்டமே தள்ளிநில். விரைவில் தளபதி ஸ்டாலின் ஆட்சி அமைவது உறுதி.

அரசியலில் அகரம் கூட அறியாதவர்கள் காங்கிரசினர். சிகரமாய் திகழும் தளபதிக்கு ஆலோசனை சொல்ல வேண்டாம்.